| | |
|---|---|
| **வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்** | |
| **இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018** | |
| **தரம் - 9** | **சைவநெறி** | **நேரம் :- 2.00 மணித்தியாலம்** |

சுட்டெண் :- ..................................

## பகுதி – I

❖ **எல்லா வினாக்களிற்கும் விடை தருக.**

01. ஆவணி மாத பூர்வபட்ச சதுர்த்தி விரதம் அனுஸ்டிக்கப்படும் கடவுள்
 1) விஸ்ணு 2) விநாயகர் 3) சிவன் 4) முருகன்

02. திருச்சதகம் இடம் பெறுவது
 1) திருவாசகம் 2) திருக்கோவையார் 3) திருவிசைப்பா 4) திருமந்திரம்

03. சிவனடியார்களிற்குத் தினமும் உணவளித்து எஞ்சியதைத்தான் உண்டு வாழ்ந்த சிவனடியார்
 1) திருமாளிகைத்தேவர் 2) சேக்கிழார் 3) சேந்தனார் 4) திருநாவுக்கரசர்

04. எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கநின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே எனப்பாடியவர்
 1) சேந்தனார் 2) சேக்கிழார் 2) மணிவாசகர் 4) தாயுமானவசுவாமிகள்

05. தட்சணாயன கால ஆரம்பம்
 1) ஆடி மாதம் முதல் நாள் 2) தை மாதம் முதல் நாள்
 3) சித்திரை மாதம் முதல் நாள் 4) ஆவணி மாதம் முதல் நாள்

Education கல்வி අධ්‍යාපන

06. தசரா என்ற பெயரில் இந்தியாவில் கொண்டாடப்படுவது
 1) சிவராத்திரி 2) நவராத்திரி 3) ஓணம்பண்டிகை 4) போகிப்பண்டிகை

07. அம்பிகை பூப்பெய்தியதும், ஆண்டாள் நாச்சியார் திருவதாரம் செய்த நாளும்
 1) பங்குனி உத்தரம் 2) ஆடிச்செவ்வாய் 3) ஆடிப்பூரம் 4) ஆவணிப்பௌர்ணமி

08. இருபத்தேழு நட்சத்திரங்களில் பூரம் நட்சத்திரம் அமைவது
 1) 7 வது நட்சத்திரம் 2) 5 வது நட்சத்திரம் 3) 9 வது நட்சத்திரம் 4) 11 வது நட்சத்திரம்

09. மானி என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர்
 1) மங்கையர்க்கரசியார் 2) திலகவதியார்
 3) ஆண்டாள் 4) காரைக்கால் அம்மையார்

10. சைவசமய ஆரம்பபோதினி எனும் நூலை ஆக்கியவர்
 1) ஆறுமுக நாவலர் 2) விபுலானந்தர்
 3) அருணாசல தேசிகர் 4) சுவாமி விவேகானந்தர்

11. திருஞான சம்பந்தர் உபநயனம் பெற்ற போது பாடிய தேவாரம்
 1) "காதலாகிக்கசிந்து........" 2) "துஞ்சலும் துஞ்சலிலாதபோழ்திலும்......"
 3) "இல்லக விளக்கது......." 4) "சொற்றுணை வேதியன்.........."

12. சங்கம வழிபாடு என்பது

1) சிவனடியார்களை வழிபடுதல் 2) சிவலிங்கத்தை வழிபடுதல்

3) குருவை வழிபடுதல் 4) சிவசின்னங்களைப் போற்றுதல்

13. திருப்பாவை பாடியவர்

1) மாணிக்கவாசக சுவாமிகள் 2) ஆண்டாள்

3) பெரியாழ்வார் 4) நம்மாழ்வார்

14. மங்கையர்கரசியார் முத்தி அடைந்ததினம்

1) சித்திரைச்சதயம் 2) சித்திரைப்பரணி 3) வைகாசிப்பரணி 4) வைகாசி ரோகினி

15. இயமம் என அட்டாங்க யோகங்களில் குறிப்பிடப்படுவது

1) அமரும் நிலை 2) மூச்சைக்கட்டுப்படுத்துதல்

3) நற்காரியங்களைச் செய்தல் 4) தீயவற்றை விலக்கல்

16. கதிர்காம பாதயாத்திரை ஆரம்பமாகும் தலம்

1) நல்லூர் கந்தன் ஆலயம் 2) மாவிட்டபுரம் முருகன் ஆலயம்

3) செல்வச்சந்நதி முருகன் ஆலயம் 2) வெருக்கல் சித்திரவேலாயுதர் ஆலயம்

17. நாலாயிர திவ்விய பிரபந்தங்களைத் தொகுத்தவர்

1) நம்பியாண்டார் நம்பி 2) நாதமுனிகள்

3) இராஜஇராஜ சோழன் 4) பெரியாழ்வார்

18. சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலப்பகுதி

1) திதி 2) கரணம் 3) வாரம் 4) யோகம்

19. பண்மொழி அம்மையுடன் இறைவன் வீற்றிருக்கும் திருத்தலம்

1) திருவாரூர் 2) திருப்பாண்டிக் கொடுமுடி

3) திருவொற்றியூர் 4) திருக்குறுக்கை வீரட்டானேச்சரம்

20. திராவிடவேதம் எனப்போற்றப்படுவது

1) பன்னிருதிருமுறைகள் 2) நாலாயிர திவ்விய பிரபந்தங்கள்

3) தேவாரங்கள் 4) பன்னிரு தோத்திரங்கள்

(20X2=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஏனைய வினாக்களில் நான்கு வினாக்கள் அடங்கலாக ஐந்து வினாக்களிற்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி பாடியவர் பெயர் தலம் என்வற்றைத்தருக.
   1) "ஏழிசையாய் இசைப்பயனாய்........."
   2) "நையாத மனத்தினனை..........."
   3) "போற்றி ஓம் நமசிவாய..........."
   4) "மற்றுப்பற்று எனக்கின்றி............"
   5) "சொல்லாண்ட சுருதி............"

(7+ ½ + ½ X2=16 புள்ளிகள்)

02. "திருவருட்சிறப்பு மிக்க திருத்தலங்களின் தரிசனத்துக்கான புனிதப்பயணமே தலயாத்திரை ஆகும்"
   1) இலங்கையிலுள்ள தலயாத்திரைக்குரிய புனிததலங்கள் 3 தருக?
   2) கதிர்காம ஆலய அமைவிடம் தீர்த்தம் என்பவற்றைத்தருக.
   3) கதிர்காமத்திற்கு தலயாத்திரை மேற்கொண்ட ஈழத்துச்சித்தர்கள் மூவர் பெயர் தருக.
   4) கதிர்காமப் பாதயாத்திரை செல்வோரின் தோற்றத்தையும் செயல்களையும் தருக.

(2+3+3+3=11 புள்ளிகள்)

03. அன்பே சிவம் என்பது திருமூலர் வாக்கு
   1) சைவநாற்பாதங்களும் எவை?
   2) சற்புத்திர மார்க்கம் என்று அழைக்கப்படுவது யாது? அந்நெறியில் முத்தி அடைந்த சமயகுரவர் யார்?
   3) அட்டாங்க யோகங்களில் நான்கின் பெயர் தருக.
   4) உம்மால் செய்யக் கூடிய சரியைத் தொண்டுகள் யாவை? எவ்வாறு செய்வீர்?

(2+3+3+3=11 புள்ளிகள்)

04. "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது"
   1) மனம் ஆரோக்கியம் பெற நாம் செய்ய வேண்டிய செயல்கள் மூன்று எழுதுக.
   2) எமது முன்னோர் உயிர்கள் மீது இரக்கம் கொண்டு செய்த செயல்கள் 2 தருக.
   3) உயிர்கள் மீது இரக்கம் காட்டிய மன்னர்கள் இருவர் பெயர் தருக.
   4) திரிகரணங்களும் எவை? அவற்றை சரியான பாதையில் செலுத்த நீர் யாது செய்வீர்?

(2+3+3+3=11 புள்ளிகள்)

05. "கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே"
   1) நீர் கொண்டாடும் பண்டிகைகள் 4 எழுதுக.
   2) மகரசங்கிராந்தி, கடகசங்கிராந்தி என அழைக்கப்படும் பண்டிகைகள் எவை?
   3) பண்டிகைகளைக் கொண்டாடுவதனால் கிடைக்கும் பயன்கள் எவை?
   4) ஆடிப்பிறப்பன்று நாம் செய்யும் நற்காரியங்கள் யாவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

06. "வைஷ்ணவ மரபில் ஆழ்வார்கள் சிறப்பிடம் பெறுகின்றனர்"
   1) நாலாயிர திவ்விய பிரபந்தங்களைத் தொகுத்தவர் யார்?
   2) நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் என்ற சொல்லின் பொருளை எழுதுக.
   3) நம்மாழ்வாரின் சிறப்பு யாது?
   4) முதலாழ்வார்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள் யாவர்.

(2+3+3+3=11 புள்ளிகள்)

07. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
   1) பஞ்சாங்கம்
   2) திருமுறைகள்
   3) நவராத்திரிவிரதம்
   4) மங்கையற்கரசியார்.

(5 ½ X2=11 புள்ளிகள்)

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**